# மெதடிஸ்ட் பெண்கள் தமிழ் வருடாந்தர மாநாடு

## கிறிஸ்தவ கல்வி

கிறிஸ்துவில் அன்பான சகோதரிகளே,

நம்முடைய ஆண்டவரான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இவ்வருடத்தின் கிறிஸ்துவ இல்லம் மற்றும் குடும்ப வாரம், ஜுன் மாதத்தில் அனுசரிக்கப்படும். இவ்வருடத்தின் கருப்பொருள்: 'தேவ மகிமையை தேடும் குடும்பம்'. ஏழு நாட்கள் தியானம் இக்கருப்பொருளை குறித்து இருக்கும்.

இவ்வாரத்துக்கான தலைப்புகள்:

நாள் 1: ஏன் குடும்பம் தேவனின் மகிமையை தேட வேண்டும்?

நாள் 2: தேவனின் மகிமைக்கான திருமண வாழ்க்கை.

நாள் 3: தேவனின் மகிமைக்கான இல்லம் அமைத்தல்.

நாள் 4: கீழ்ப்படிதலின் மூலம் தேவ மகிமையை தேடும் குடும்பம்.

நாள் 5: அன்பின் மூலம் தேவ மகிமையை தேடும் குடும்பம்.

நாள் 6: ஒற்றுமையின் மூலம் தேவ மகிமையை தேடும் குடும்பம்.

நாள் 7: தேவ மகிமையை குடும்பமாக தேடும் போது வரும் நன்மைகள், செய்யாத போது வரும் காரியங்கள்.

சேகரிக்கப்படும் காணிக்கைகள் உங்களுடைய ஸ்தல மெதடிஸ்ட் பெண்கள் ஊழியங்களுக்காக பயன்படுத்தப்படும். இந்த சாதனங்கள் மிகவும் பிரயோஜனமுள்ளதாகவும் கனிக்கொடுக்கக்கூடியதாகவும் இருக்கும் என்று விசுவாசிக்கின்றேன். இந்த வாரத்தை அர்த்தமுள்ளதாக அனுசரிக்கவும்.

ஆசீர்வாதமான கிறிஸ்துவ இல்லம் மற்றும் குடும்ப வார வாழ்த்துக்கள்.

அவருடைய சேவையில்,<br>
ஜென்சி ஷாம்<br>
(கிறிஸ்தவ கல்வி ஒருங்கிணைப்பாளர்)

நாள் 1: ஏன் குடும்பம் தேவனின் மகிமையை தேட வேண்டும்?

வாசிப்பு: 1 கொரிந்தியர் 10:31

ஒரு குடும்பமாக நம்முடைய அழைப்பு என்ன? தனிப்பட்ட விசுவாசியாக மற்றும் திருச்சபையாக தேவனின் நோக்கத்தை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். உங்களுடைய குடும்பத்தை குறித்து தேவனுக்கு நோக்கம் உள்ளதா? இதற்கு பதில் உள்ளது. குடும்பங்களை ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக தேவன் ஏற்படுத்தியிருக்கிறார் மற்றும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு குறிப்பிட்ட அழைப்பு உள்ளது. தங்களை தாங்களே சேவிப்பதற்காக தேவன் குடும்பங்களை ஏற்படுத்தவில்லை. சுவிசேஷத்தைப் பகிரவும் நியாயப் பிரமாணங்களை நிறைவேற்றவும் தேவன் குடும்பங்களை உருவாக்கியிருக்கிறார். நம் குடும்பங்கள் தேவனை மகிமைப்படுத்துவது அவருடைய பிரதான நோக்கமாக இருக்கிறது. தேவன் குடும்பங்களுக்காக இருக்கிறார். அவர் எனக்காகவும் உங்களுக்காகவும் இருக்கிறார். ஒற்றுமையாக இராஜியத்துக்காக.

தேவனை மகிமைப்படுத்துவதின் அர்த்தம் தேவனை மேலாக, நம்முடைய சிந்தையில், உயர்ந்த நிலையில் வைத்திருப்பது. தேவனை துதிக்கவும் மகிமைப்படுத்தவும் நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம். (சங்கீதம் 100:3 மற்றும் அப்போஸ்தலர் 17:25). 1 தெசலோனிக்கேயரில் 2:1-6.

நம்முடைய குடும்பமும் எல்லா வழியிலும் தேவனுக்கு மகிமையை கொடுக்கும்படி வாழ வேண்டும் - வார்த்தையில், கிரியையில் மற்றும் நடத்தையில்.

மனிதனின் மகிமையை விரும்புதல்

1. நீங்கள் பார்ப்பதையும் உணர்கிறதையும் வைத்து உங்களுடைய வெற்றியை அளவிடுவது (உதாரணம் - நீங்கள் செய்வதை யாரும் பாராட்டாமல் அல்லது உங்களுடைய ஊழியம் சரியாக நடைப்பெறாவிட்டால், அது தோல்வி என்று எண்ணுவது)
2. உங்களுடைய வேலை இடத்தில், நண்பர்கள் மத்தியில் அல்லது திருச்சபையில் நீங்கள் உற்சாகப்படுத்தப்படுகிறீர்கள் அல்லது உற்சாகப்படுத்தப்படவில்லை.
3. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை வைத்து முடிவு எடுப்பது.
4. மற்றவர்கள் உங்களுடைய முயற்சிகளை பாராட்டவில்லை என்றால் நீங்கள் உற்சாகமில்லாமல், எரிச்சலடைகிறீர்கள் அல்லது கோபப்படுகிறீர்கள்.
5. மற்றவர்கள் உங்களை பாராட்டும் போது தேவனின் வழிநடத்துதலில் சார்ந்திருக்காமல், உங்களுடைய சொந்த திறமைகளில் சார்ந்திருக்கிறீர்கள்.
6. மற்றவர்கள் வெற்றியடையும் போது நீங்கள் பொறாமை அடைகிறீர்கள்.
7. தேவ வார்த்தையிலும் ஜெபத்திலும் உங்களுடைய நேரத்தை செலவிடாமல், உங்களுடைய திறமை, வேலை அல்லது முயற்சிகளை சரிப்படுத்துவதில் கவனமாயிருப்பது.

தேவ மகிமையை விரும்புதல்

1. மற்றவர்களின் கவனம் உங்கள் மேல் இல்லாவிட்டாலும், கிறிஸ்துவின் நாமம் உயர்த்தப்படுவதை குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.
2. மற்றவர்கள் உங்களை பாராட்டும் போது, உங்களுடைய வாழ்க்கையில் தேவனின் கிருபையில் நீங்கள் தாழ்மையோடு பெருமகிழ்ச்சியோடு இருப்பீர்கள்.
3. உங்களுடைய ஊழியம் பாராட்டு பெறவில்லை என்றாலும், கிறிஸ்துவை சேவிப்பதில் தொடர்ந்து நன்மை செய்யவும் மகிழ்ச்சியாயிருக்கவும் விரும்புவீர்கள்.

4. சிறப்பாக செய்பவர்களை குறித்து சந்தோஷமாகவும் தோல்வி அடைகிறவர்கள் மேல் கருசனையும் கிருபையுமாக இருப்பீர்கள்.
5. உங்களுடைய போராட்டங்கள், தோல்விகள் மற்றும் பாவங்களைக் குறித்து நேர்மையாக இருப்பீர்கள்.
6. சமூக ஸ்தலங்களில் அங்கீகாரம் பெற விரும்பமாட்டீர்கள்.
7. சுய-பாதுகாப்பு மற்றும் நீதியை தேடாமல், உங்கள் மத்தியில் உள்ளவர்களிடத்தில் கிருபை, பாவமன்னிப்பு மற்றும் கிறிஸ்துவில் ஒற்றுமையை தேடுவீர்கள்.
8. உலக காரியங்களை மற்றும் வெற்றியின் படியை நோக்காமல், கிறிஸ்துவின் தன்மைகளை அறிந்து கொள்ள நாடுவீர்கள்.

<u>கலந்துரையாடல் கேள்வி</u>

மேற்காணும் மனிதனின் மகிமை மற்றும் தேவனின் மகிமையை பயன்படுத்தி, உங்கள் குடும்பத்தை ஆராய்ந்து பார்க்கவும். நீங்கள் எந்த மகிமையை தேடுகிறீர்கள்?

நாள் 2 தேவனின் மகிமைக்காக திருமண வாழ்க்கை

வாசிப்பு: கொலோசெயர் 1:16

திருமணம் தேவனின் மகிமைக்காக உருவானது. தேவனின் மகத்துவமான உண்மை, அழகு மற்றும் நன்மைக்காக உருவானது. தேவனின் மகிமையை வெளிப்படுத்த நாம் உருவாக்கப்பட்டோம்.

தேவனை அறிந்து கொள்வது திருமண வாழ்க்கையை புரிந்து கொள்ள ஆரம்பமாக இருக்கும். எல்லாம் தேவனுக்காவும் தேவனாலும் உருவாக்கப்பட்டது. இதை நம் சிந்தையிலும் இருதயத்திலும் சரியாக வைத்தோமானால், திருமணம் மறுரூபமாக்கப்படும். தேவனின் உண்மையை, பாத்திரத்தை, அழகை மற்றும் மகிமையை வெளிப்படுத்தும் தேவனால் உருவாக்கப்பட்ட திருமணமாக இருக்கும்.

இரண்டு காரியங்களில் தேவனின் மகிமை வெளிப்படும். ஒன்றாவது, கணவன் மனைவி இரண்டு பேரும் தேவன் அவர்களுக்கு கொடுத்த பாத்திரத்தை நிறைவேற்றும் போது – கணவன் கிறிஸ்துவை போல் தலைவராகவும், மனைவி அதை பின்பற்றுகிறவராகவும் இருக்கிறார்கள். இப்படி வாழும் போது தேவ அன்பின் மகிமை மற்றும் கிறிஸ்துவின் ஞானம் உலகத்துக்கு வெளிப்படும். இரண்டாவது, தேவனில் முழுமையான திருப்தி அடைய வல்லமை. திருமணத்தை விட தேவனின் மகிமை பெரிது என்று நாம் எண்ணும் போது நம் திருமணம் தேவ மகிமையினால் காக்கப்படும் வனையப்படும். நம் திருமணம் மற்றும் நம் கணவரை குறித்து நாம் இப்படி சொல்லும் போது நம் திருமணம் தேவ மகிமைக்காக வாழும்.

<u>கலந்துரையாடல் கேள்வி</u>

தேவனை மகிமைப்படுத்தும் வாழ்க்கை நாம் வாழும் போது நம் வாழ்க்கை தேவனை சார்ந்து மற்றும் சுய-நலம் அற்ற வாழ்க்கையாக இருக்கும். ஒருவர் மட்டுமே இத்தகைய ஒப்புக்கொடுத்தலோடு வாழ்ந்தால் என்னவாகும்? இந்த திருமணம் தேவனை மகிமைப்படுத்துமா?

நாள் 3 தேவனின் மகிமைக்கான இல்லம் அமைத்தல்

வாசிப்பு: நீதிமொழிகள் 31:27 மற்றும் நீதிமொழிகள் 21:9

தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் கொண்டு வரும் இல்லத்தின் சூழ்நிலையை நாம் இல்லத்தரசிகள் முதலில் அமைக்க வேண்டும். நம் குடும்பத்தை தேவனிடத்தில் இணைக்கவும் அல்லது பிரிக்கவும்படியான சூழ்நிலையை இல்லத்தரசிகளான நம்மால் அமைக்க முடியும். குடும்பத்தின் மனைவி அல்லது தாய் இல்லத்தில் தன்மையை அமைக்கிறோம். தேவனுக்கு வேண்டிய தன்மை – மகிழ்ச்சி மற்றும் அன்பில் பிரியப்படுவது. உங்களால் அன்பான இல்லத்தை உருவாக்க முடியும் அல்லது ஒழுங்கற்ற இல்லத்தையும் உருவாக்க முடியும். ஆதலால், எல்லாம் உங்கள் மூலமே ஆரம்பிக்கப்படும். நீங்கள் செய்வதையும், நடந்துக் கொள்வதையும் வைத்து உங்கள் குடும்பம் அமையும்.

1. உங்கள் குடும்பத்தை பரலோகமாக மாற்றுங்கள் - உங்கள் கணவர் மற்றும் பிள்ளைகள் வர விரும்பும் இடமாக அமையுங்கள்.
2. சுவிசேஷத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இடமாக மாற்றுங்கள்.

தேவனை குறித்து எண்ணும் குடும்பமாக உங்கள் இல்லத்தை அமையுங்கள். தேவனை மகிமைப்படுத்தும் இடமாக. உதாரணம்: சுத்தம் செய்யும் போது, துதி பாடல்களை கேட்பது, நீங்கள் தேவ வார்த்தை வாசிப்பதை உங்கள் பிள்ளைகள் பார்ப்பது, உங்கள் பிள்ளைகள் வேதத்தை எடுத்து படிப்பதற்கான ஓய்வு இடங்களை அமைப்பது. சுவிசேஷம் அதிகரிக்கும் இடமாக உங்கள் இல்லத்தை உருவாக்குங்கள். வீட்டுக்கு வருபவர்களை உபசரிக்கவும் தேவனை மகிமைப்படுத்தவும் உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள். வருகிறவர்களிடம் சுவிசேஷத்தை பகிரவும் ஊழியம் செய்யவும் கற்றுக்கொடுங்கள்.

<u>கலந்துரையாடல் கேள்வி</u>

மனைவியும் தாயும் வாழ்க்கையை ‘தாங்கும் சிலுவையாக’ எண்ணினால், வீட்டில் உள்ள மற்றவர்களை எப்படி மாற்றுவது?

நாள் 4 கீழ்ப்படிதலின் மூலம் தேவ மகிமையை தேடும் குடும்பம்

வாசிப்பு: யோவான் 14:15,23 மற்றும் 1 சாமுவேல் 15:22

இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படுவதின் மூலம் அவரை நேசிப்பதை வெளிப்படுத்த முடியும். இந்த கீழ்ப்படிதல் தனிப்பட்ட ஒப்புக்கொடுத்தல் கிடையாது, குடும்பமாக ஒப்புக்கொடுப்பதாகும். குடும்பத்தை கட்டவும் வழிநடத்தவும் தேவ வார்த்தை என்ன சொல்கிறது என்று அறிந்து கணவன் மனைவி உத்தமமாக நடந்துக்கொள்ள வேண்டும்.

துதியை விட கீழ்ப்படிதலில் தேவன் அதிகமாகப் பிரியப்படுகிறார். கீழ்ப்படியாமையை தேவன் வெறுக்கிறார். அது அவருடைய மகிமையை தாக்குகிறது. கீழ்ப்படியாமை தேவ பயத்தில் மனித பயத்தை வைக்கிறது (1 சாமுவேல் 12:14 மற்றும் 24). தேவனில் பிரியப்படாமல் மற்ற காரியங்களில் பிரியப்படுவது (1 சாமுவேல் 15:19). தேவனின் நாமத்தை தேடாமல், சொந்த நாமத்தை தேடுவது (1 சாமுவேல் 12:17). தேவனின் சித்தத்தில் திருப்தியடையாமல் சொந்த ஞானத்தில் காரியங்களைச் செய்வது. தேவ சித்தத்தை விட்டு விட்டு மனித சித்தத்திற்கு அதிகமான கனத்தைக் கொடுப்பது (1 சாமுவேல் 12:23). ஆனால் கீழ்ப்படிதல் எல்லா எதிர்மறையான காரியங்களையும் அகற்றிவிட்டு தேவனை கனப்படுத்துகிறது. ஆதலால் தேவன் கீழ்ப்படிதலில் பிரியப்படுகிறார்.

தேவனுக்குக் கீழ்ப்படிவது முழுமையாக தேவனின் சித்தத்திற்குச் சமர்ப்பிப்பதாகும். ஆதலால், கணவர்களும் மனைவிகளும் முழுமையாக தேவனிடத்தில் சமர்ப்பணம் செய்ய வேண்டும். குடும்பத்தில் எடுக்கும் ஒவ்வொரு முடிவுகளிலும் தேவனின் வழிநடத்துதல் மற்றும் சித்தத்தை தேட வேண்டும். தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிய தாய்மார்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்.

<u>கலந்துரையாடல் கேள்வி</u>

திருமதி. நோவாவின் இடத்தில் உங்களை வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு அல்லது மூன்று மாடி பேழைக் கட்டும் ஒருவரோடு நீங்கள் திருமணம் செய்திருந்தால் உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்? உங்கள் கணவர் உண்மைக்கும் கீழ்ப்படிதலுக்கும் நிற்கிறார் என்று மகிழ்ச்சியாக இருந்திருப்பீர்களா அல்லது அவர் சரியான மனநிலையில் உள்ளாரா என்று யோசிப்பீர்களா?

நாள் 5 அன்பின் மூலம் தேவ மகிமையை தேடும் குடும்பம்

வாசிப்பு: 1 கொரிந்தியர் 13:1-3

தேவன் நம்மை நேசித்த விதமாக நாம் ஒருவரை ஒருவர் குடும்பத்தில் நேசிக்க வேண்டும். நாம் நேசிக்க கடினமாக இருப்பவர்களையும் நேசிக்க வேண்டும், தேவனின் அளவற்ற அன்பை நாம் வெளிப்படுத்த வேண்டும். தேவனின் முழுமையில், அவருடைய நாமம் மகிமையடைய இது உறுதுணையாக இருக்கும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் முழுமையை மற்றும் முழுமையான ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைய இது உதவும்.

தேவன் ஒவ்வொரு மனிதனையும் அவருடைய சாயலில் படைத்திருக்கிறார், நாம் நேசிப்பதற்காக படைக்கப்பட்டிருக்கிறோம். அன்பு தேவைக்கும் அன்பை கொடுக்கவும் நாம் உருவாக்கப்பட்டோம். அன்பு ஆவியின் முதற்கனியாகும், மற்ற எல்லா கனிகளும் அன்பின் தன்மைகள். அன்பு உணர்வுக்கும் மேலானது, அனுபவத்தை விட மேலானது, அது தேவனின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும், தேவ மகிமை. குடும்பத்தின் குறிக்கோள் தியாகத்துடனான அன்பு, தனன்னையே நேசிக்கும் அன்பு அல்ல. எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்த, நாம் உண்மையாக நேசிக்க வேண்டும் (ரோமர் 12:9). அன்பின் காரியங்களில் தேவ மகிமை காணப்படும். குடும்பத்தில், கணவன் மனைவி கோபப்படும் போதும் அல்லது பிள்ளைகள் பொறாமை கொள்ளும் போதும், தேவன் அங்கு மகிமைப்படவில்லை. அன்பில்லாத கணவனிடம் அன்பை வெளிப்படுத்தும் போது, தேவன் மகிமைப்படுகிறார், ஏனெனில் மனைவி தேவ அன்பை வெளிப்படுத்துகிறார். இதுதான் தியாகத்துடனான அன்பு. இது தேவனுக்கான முழுமையான அன்பு. நாம் மற்றவர்களை நேசிக்கும் போது குறிப்பாக நம் குடும்பத்தினரை நேசிக்கும் போது, தேவனுக்கான நம்முடைய அன்பு வெளிப்படுகிறது. அப்போது, தேவன் மகிமைப்படுவார். பெற்றோர்களான நாம், நம் பிள்ளைகளுக்கு தேவ அன்பு குறித்து கற்றுகொடுக்க வேண்டும்.

<u>கலந்துரையாடல் கேள்வி</u>

துன்பப்படும் ஜனங்களிடம் தேவ அன்பை நாம் வெளிப்படுத்த வேண்டும். ஒரு குடும்பமாக, துன்பப்படும் மற்றும் தேவையோடு உள்ள ஜனங்களிடம் எப்படி தேவ அன்பை நாம் வெளிப்படுத்தலாம்?

நாள் 6 ஒற்றுமையின் மூலம் தேவ மகிமையை தேடும் குடும்பம்

வாசிப்பு: யோவான் 17:21-22

குமாரன், பிதா மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒருவராக இருக்கின்றனர். தேவன் தம்முடைய சாயலில் மனிதனை படைக்கும் போது இது நமக்கு புரிகிறது (ஆதியாகமம் 1:26). அவர்கள் மூவரும் ஒன்றாக இருக்கின்றனர், இந்த ஒற்றுமையில் தேவ மகிமை வெளிப்படுகிறது. நம்முடைய ஒற்றுமையிலும் தேவ மகிமை வெளிப்பட தேவன் வாஞ்சையாக உள்ளார் (யோவான் 17:11). இயேசு அவரை பின்பற்றுகிறவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

ஒரு குடும்பமாக நாம் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாக இருக்கும் போது தேவன் மகிமைப்படுவதை விட அழகான காரியங்கள் பல உண்டு. ஒற்றுமையில்லாமல் உடைக்கப்பட்ட குடும்பத்தை விட அசிங்கமான காரியங்களும் பல உண்டு.

கலாத்தியர் 5:22-23 ஆவியின் கனிகள். ஆவியில் முதிர்ச்சி அடைந்த தேவ ஆவியின் அழகான தன்மைகளை இது வெளிப்படுத்துகிறது. ஆனால் கலாத்தியர் 5இல் உள்ள காரியங்கள் வித்தியாசம் (கலாத்தியர் 5:19-21). பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள்.

ஒற்றுமையில்லாமையை தேவன் வெறுக்கிறார். மேற்காணும் 8 காரியங்களும் குடும்பங்களில் அதிகமான பாதிப்பை கொண்டு வரும். கணவன் மனைவி கோபப்படும் போதும், பிள்ளைகள் பொறாமைப்படும் போதும், பெற்றோர்கள் குடும்பங்களை புறக்கணிக்கும் போதும், ஒற்றுமை பிளவுப்படுகிறது. தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறோம். குடும்பங்கள் உடையும் போது தேவன் மகிமைப்படமாட்டார்.

இதை எப்படி நாம் தடுக்க முடியும்? நம்முடைய நிஜமான எதிரியை உணருவது மற்றும் கண்டடைவது (எபேசியர் 6:12). குடும்பம் ஒரு காரியத்தில் இணைந்து வரும் போது, அதிகமான பிரச்சனைகள் எழும்பும். ஒருவரோடு ஒருவர் கோபத்தை தணித்து ஒற்றுமையோடு அந்த பிரச்சனையை மேற்கொள்ள வேண்டும்.

கலந்துரையாடல் கேள்வி

குடும்பம் ஒற்றுமையாக இருந்து எதிரியை மேற்கொள்வது. கலந்துரையாடவும்.

நாள் 7 தேவ மகிமையை குடும்பமாக தேடும் போது வரும் நன்மைகள், செய்யாத போது வரும் காரியங்கள்

வாசிப்பு: யோவான் 7:18

நாம் தேவனை மகிமைப்படுத்தும் போது, தேவன் நமக்கு அளவற்ற சந்தோஷத்தைக் கொடுக்கிறார். சந்தோஷம் உங்களுடைய கவலைகள், வலிகள் மற்றும் தோல்விகளை துரத்தும் என்பதல்ல, எல்லாவற்றின் மத்தியிலும் கிறிஸ்தவர்கள் இந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியும். பாவம் கிறிஸ்தவர்களின் சந்தோஷத்தை எடுக்கும். சங்கீதம் 51:12இன் பிரகாரம், நாம் தாவீதோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும், 'இரட்சிப்பின் சந்தோஷத்தை சரிப்படுத்தி, பரிசுத்த ஆவியானவர் அந்த சந்தோஷத்தை திருப்பி தர ஜெபிக்க வேண்டும்'. நாம் நம்மை சோதித்து பார்ப்போம். ஒரு குடும்பமாக நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோமா? இல்லையென்றால், நாம் மனந்திரும்பி நம்முடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை செய்வோம். நாம் குடும்பமாக தேவனை மகிமைப்படுத்துவோம், அப்பொழுது அவருடைய சந்தோஷத்தை நாம் அனுபவிக்க முடியும். ஆவியின் இரண்டாம் கனி சந்தோஷம். அளவற்ற சந்தோஷத்தை நாம் அனுபவிக்க அன்பு மிகவும் முக்கியமானது (சங்கீதம் 16:11).

நாம் தேவ மகிமையை தேடவில்லை என்றால், நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். உதாரணம் அப்போஸ்தலர் 12:23. தேவனுக்கு மகிமை செலுத்தாதனால் ஏரோது இறந்தான். அப்போஸ்தலர் 12:23 இப்படி சொல்கிறது, 'அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான், அவன் புழுப்புழுத்து இறந்தான்'.

<u>கலந்துரையாடல் கேள்வி</u>

குடும்பம் தேவனுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் அதற்கு பிரதான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேவனுடைய மகிமை வெளிப்படுவதற்காக குடும்பம் அவரால் உண்டாக்கப்பட்டது. தேவனை நித்திய காலம் வரை நாம் குடும்பமாக மகிமைப்படுத்த வேண்டும். யோவான் 5:8இல், இயேசு சீஷர்களிடம் இப்படி சொல்கிறார், 'நீங்கள் கனிக்கொடுக்கும் போது என் பிதா இதனால் மகிமைப்படுவார்.' எப்படி? உலகம் ஆவி நிறைந்த வாழ்க்கையின் முடிவுகளை காணும் போது. இதற்காகதான் நாம் இங்கு இருக்கிறோம் - உலகத்துக்கு தேவனை வெளிப்படுத்தும் குடும்பமாக வாழ்ந்து காட்ட.